# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 220/ந/2025. நாள் 26.08.2025**

திரு. K. செந்தில்குமார்,
உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி, திருப்பூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, தளிரோடு, D.V.பட்டினம், எண்.172 C, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. செந்தில்குமார், என்பவரது **16.06.2025** நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் **23.06.2025** அன்று பெறப்பட்டு, 220/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, தளிரோடு, D.V.பட்டினம், எண்.172 C, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. செந்தில்குமார் என்பவரின் **16.06.2025** நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"1. கோரிக்கை எண்.1 – நான் உடுமலைப்பேட்டை நகராட்சியில் தண்ணீர் விநியோக மேற்பார்வையாளராக பணியாற்றி **31.12.2021** தேதி விருப்ப ஓய்வு பெற்று, 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை எனக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி ஊதியக்குழு நிலுவை, அதற்கான வட்டி மொத்தம் **ரூ.20,91,838/–**ஐ பல கடிதங்கள் எழுதியும், பலமுறை நேரில் சென்று கேட்டும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம் கோரியும், இன்று வரை எனக்கு வழங்கவில்லை. இத்தொகையை உடன் வழங்க உத்தரவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கை எண்.2– நான் விருப்ப ஓய்வு பெற்ற பிறகு எனக்கு வழங்க வேண்டிய, ஈட்டிய விடுப்பு, மற்றும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை காசாக்கி கொள்ள அனுமதித்து **18.02.2022** தேதி வழங்கப்பட்ட உத்தரவில், பின்னாளில் தணிக்கைத் தடை எழுப்பப்படும் என்பதற்காக **10% ரூ.86,017/–** பிடித்தம் செய்து வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையை விதிகளுக்கு, சட்டத்திற்கு முரணாக ஓய்வு பெற்ற எனக்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் வலுக்கட்டாயமாக பிடித்தம் செய்து வைத்துள்ளனர். தற்பொழுது தணிக்கை அனைத்தும் முடிவு பெற்று தணிக்கைத் தடை ஏதும் என் பெயரில் நிலுவையில் இல்லை. இருப்பினும் இன்று வரை மேலே குறிப்பிட்டபடி பல வகையில் கோரியும் இத்தொகையை இன்றுவரை எனக்கு வழங்கவில்லை. சட்டவிரோதமாக பிடித்தம் செய்த, இத்தொகையை இதற்கான அரசு வட்டி **6 %** கணக்கிட்டு, இதையும் சேர்த்து எனக்கு உடன் வழங்க உத்தரவிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் கீழ்கண்ட தகவல்களையும் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர், தாராபுரம், கடிதம் எண்.528/24, நாள் 23.02.2024 –1ல் தாராபுரம் நகராட்சியிலிருந்து, எனது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.87,989/–ஐ 13.02.2020–ல் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இன்றுவரை எனது கணக்கில் சேர்த்து எனக்கு வழங்கவில்லை.

நகராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலர், உடுமலைப்பேட்டை அவர்களின் கடித ந.க.எண்.823/2024சி2, நாள் 29.04.2024–ல் எனது சேமநலநிதி கணக்கில் 2009–10 முதல் 2021–22 வரை உடுமலைப்பேட்டை நகராட்சியில் பிடித்தம் செய்யப்பட்ட சந்தா தொகை கடன் தவணை திருப்பி செலுத்திய தொகை ஆகியவற்றை தெரிவித்து தகவல் அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தகவலில் பல குறைபாடுகள் உள்ளது. பிடித்தம் செய்யப்பட்ட பல தொகைகள் என்னுடைய கணக்கில் காண்பிக்கப்படவில்லை. உதாரணத்திற்கு, நகராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர், தாராபுரம், கடிதம் எண்.528/24, நாள் 23.02.2024–ல் குறிப்பிட்டுள்ள தாராபுரம் நகராட்சிலிருந்து அனுப்பப்பட்ட தொகை ரூ.87,989/– இன்று வரை எனது கணக்கில் சேர்க்கப்படவில்லை. அதே போல் எனக்கு 18.06.2013 தேதியில் ரூ.1,32,000/– எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை எனக்கு வழங்கப்படவில்லை. தவறாக என்னுடைய கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதே போல் 14.03.2011 தேதி ரூ.4,129/– எனது கணக்கில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை எனக்கு வழங்கப்படவில்லை. ஆனால் இத்தொகையை எனது அனுமதியில்லாமல் சேமநலநிதியில் பிடித்தம் செய்து நீதிமன்ற குடிநீர்க்கட்டணம் செலுத்தப்படாததற்கு வரவு வைத்துள்ளனர்.

உடுமலைப்பேட்டை பொதுத் தகவல் அலுவலர், நகராட்சி அலுவலகம், ந.க.எண்.2736/2024/பி2, நாள் 22.11.2024ல் எனது சேமநலநிதி கணக்கில் 2009–10 முதல் 2021–22 வரை தொகை வழங்கப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கிற்கும், என்னுடைய கணக்கிற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளது.

உடுமலைப்பேட்டை பொதுத் தவகல் அலுவலர், நகராட்சி அலுவலகம், ந.க.எண்.1956/2024/சி2, நாள் 05.09.2024–ல், எனது ஈட்டிய விடுப்பு, காசாக்கப்பட்ட ஊதியத்தில் 10% பிடித்தம் செய்து வைப்புநிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இன்றுவரை எனக்கு வழங்கப்படவில்லை. இந்த விவரம் எனது கோரிக்கை எண்.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுமலைப்பேட்டை பொதுத் தகவல் அலுவலர், நகராட்சி அலுவலகம், ந.க.எண்.2245/2024/சி2, நாள் 08.10.2024–ல் எனது ஈட்டிய விடுப்பு, காசாக்கப்பட்ட ஊதியத்தில் 10% பிடித்தம் செய்து சட்ட விரோதமாக வைப்புநிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளத் தொகை குறித்து தகவல் கோரியதில் இந்தத் தகவல் கடிதத்தில், வைப்புநிதி கணக்கிடும் பணி முடிவு பெறவில்லை எனவும், பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்து அதற்கான பதில் வழங்கியுள்ளனர்.

உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளரின் செயல்முறை கடிதம் எண்.4424/2021/சி1, நாள் 18.02.2022–ல் எனது ஈட்டிய விடுப்பு, காசாக்க வழங்கப்பட்ட உத்தரவில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட 10% வைப்புநிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகை குறித்து தகவல் கோரியதில் வைப்புநிதி கணக்கிடும் பணி முடிவு பெறவில்லை எனவும், பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்து இன்றுவரை இத்தொகையை எனக்கு வழங்கவில்லை.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4107/2020/பி1, நாள் 31.12.2021–ல் என்னை 31.12.2021 தேதி சுயவிருப்பு ஓய்வில் செல்ல அனுமதித்து வழங்கப்பட்ட உத்தரவு நகல் பார்வைக்கு சமர்ப்பித்துள்ளேன்.

மேற்காண் ஆவணங்களை கனிவுடன் பரிசீலனை செய்து எனக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி நிலுவைத் தொகை ரூ.20,91,838/–ஐயும், சட்டத்திற்கு புறம்பாக எனது ஈட்டிய விடுப்பு காசாக்கிய ஊதியத்தில் 10% பிடித்தம் செய்த தொகை ரூ.86,017/– ஐயும், இதற்கான அபராத வட்டி 6% ஐயும் உடன் வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரது புகார் குறித்து உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 27.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை 11.07.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1869/2025/பி2–ல் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

“தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களுக்கு திரு.K. செந்தில்குமார், குடிநீர் விநியோக மேற்பார்வையாளர், விருப்ப (ஓய்வு) என்பவரால் கொடுக்கப்பட்ட புகார் எண்.220/M/2025 நாள் 27.06.2025–ன் படியான விண்ணப்பத்தில் உடுமலைப்பேட்டை நகராட்சியில் குடிநீர் விநியோக மேற்பார்வையாளராக பணிபுரிந்து கடந்த 31.12.2021–ம் தேதியில் விருப்ப ஓய்வு பெறப்பட்டதாகவும் சேமநலநிதி வட்டித்தொகை மற்றும் ஊதியக்குழு நிலுவைத்தொகை தணிக்கை பிடித்தம் செய்த 10% தொகை போன்றவைகள் வழங்கப்படாமல் உள்ளது என்றும் மேற்படி நிலுவைத் தொகைகள் அனைத்தும் கிடைக்க உத்திரவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை 1–ற்கான பதில்

உடுமலைப்பேட்டை நகராட்சியில் குடிநீர் விநியோக மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து சுயவிருப்ப ஓய்வு பெற்ற திரு.K. செந்தில்குமார், என்பவருக்கு கடந்த 09.03.2022 அன்று சேமநலநிதி தொகை ரூ.5,88,597/– ஐ சேமநலநிதி பதிவேட்டின்படி வழங்கப்பட்டுள்ளது.

2010–11 முதல் 2021–22 வரை சேமநலநிதி தொகைக்கான வட்டித்தொகை கணக்கீடு செய்யப்பட்டு கருத்துருக்கள் உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை திருப்பூர் அவர்கள் வழியாக சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைக்கப்பெற்றதும் வட்டி தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கை 2–ற்கான பதில்

ஈட்டிய மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்புத் தொகையில் எதிர்காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் ஏற்படுத்தபடுமாயின் அதற்காக 10% தொகை பிடித்தம் செய்து நிர்வாக வரவாக்கப்பட்டு 2021–22–ம் ஆண்டு தணிக்கை முடிவுற்றதும் தனியர் மீது தணிக்கைத் தடைகள் ஏதும் ஏற்படுத்தப்படாமல் இருந்தால் 10% நிலுவைத்தொகை திரும்ப வழங்கப்படும். இது நடைமுறையில் உள்ளதாகும். இந்நிலையில் 2021–22–ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் உரிய காப்புத்தொகை பதிவேடுகள் முறையாக கண்டு முடிக்கப்படாமல் உள்ளதாக தணிக்கைத் தடை பத்தி எண்.04–ல் தெரிவித்து தணிக்கைத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி காப்புத்தொகைகள் வழங்குவது குறித்து சரித்தன்மை அறிய இயலாத காரணத்தால் மனுதாரருக்கு உரிய நேரத்தில் தணிக்கை பிடித்தம் செய்யப்பட்ட தொகை வழங்க இயலவில்லை. தற்போது பதிவேடுகள் கணக்கு முடிக்கப்பட்டு தொகை வரவாக்கப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் திரு. K. செந்தில்குமார் குடிநீர் விநியோக மேற்பார்வையாளர் தணிக்கைத் தடைக்கு பிடித்தம் செய்த தொகை ரூ.87,016/– இருப்பில் உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பரிசீலித்து தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவிக்கலாம். தாராபுரம் நகராட்சியிலிருந்து வரப்பெற்ற சேமநலநிதி தொகை ரூ.87,989/– ஐ இந்நகராட்சி சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.06 வரிசை எண்.16–ல் பதியப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 19.06.2013–ம் தேதியில் ரூ.1,32,000/– தொகையும், 14.03.2011–ம் தேதியில் ரூ.4,129/– தொகையை வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால் இந்நகராட்சியில் 2010–11 ஆம் ஆண்டு சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.06 வரிசை எண்.03, 2013–14–ம் ஆண்டு பதிவேடு பக்கம் எண்.09 வரிசை எண்.03 மேற்படி தொகைகள் வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

திரு. K.செந்தில்குமார் என்பவரின் வங்கி கணக்கு எண். பெற்று மேற்கண்ட தொகை பெறப்படவில்லை என்பதற்கான ஆதாரங்கள் வங்கியில் பெற்று, உண்மைத் தன்மை அறிந்து பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 05.08.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. K.செந்தில்குமார் என்பவர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"நான் உடுமலைப்பேட்டை நகராட்சியில் தண்ணீர் விநியோக மேற்பார்வையாளராக 1997–ல் பணியில் சேர்ந்து 31.12.2021 அன்று விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். 1997 முதல் என்னிடம் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான தொகை வட்டியுடன் வழங்கப்பட வேண்டும். நான் ஓய்வு பெற்று, 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை எனக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி, ஊதியக்குழு நிலுவை, அதற்கான வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.20,91,838/–யை வழங்கக்கோரி பல கடிதங்கள் எழுதியும், பலமுறை நேரில் சென்று கேட்டும், இன்று வரை தனக்கு வழங்கப்படாமல் உள்ளது. இத்தொகைகளை உடன் வழங்க உத்தரவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தனக்கு வழங்க வேண்டிய, ஈட்டிய விடுப்பு, மற்றும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை காசாக்கிக்கொள்ள 18.02.2022 தேதி வழங்கப்பட்ட உத்தரவில், அனுமதிக்கப்பட்டு, பின்னாளில் தணிக்கைத் தடை எழுப்பப்படும் என்பதற்காக 10% ரூ.86,017/– பிடித்தம் செய்து வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையை வலுக்கட்டாயமாக பிடித்தம் செய்து வைத்துள்ளனர். தற்பொழுது தணிக்கைத் தடை ஏதும் என் பெயரில் நிலுவையில் இல்லை என்பதால், பிடித்தம் செய்தத் தொகையை அரசு வட்டி 6 % கணக்கிட்டு உடன் வழங்க உத்தரவிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தாராபுரம் நகராட்சியில் எனது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை ரூ.87,989/–ஐ 13.02.2020ல் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரம் தாராபுரம் நகராட்சியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தொகை இன்றுவரை எனது கணக்கில் சேர்க்கப்படவில்லை. மேலும் 14.03.2011 தேதி ரூ.4,129/– எனது கணக்கில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்போது நான் விடுப்பில் இருந்ததால், மேற்படித் தொகை வழங்கப்படவில்லை. அதேபோல் 18.06.2013 தேதியில் ரூ.1,32,000/– எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டத் தொகையும் தவறாக என்னுடைய கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரின் 18.02.2022 நாளிட்ட கடிதம் எண்.1424/2021–ல் ஈட்டிய விடுப்பு காசாக்க வழங்கப்பட்ட உத்தரவு நகலும், ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட 10% வைப்புநிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தொகை குறித்து தகவல் கோரியதில் வைப்புநிதி கணக்கிடும் பணி முடிவு பெறவில்லை எனவும், பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்து இன்று வரை இத்தொகை எனக்கு வழங்கப்படவில்லை. மேற்கண்ட ஆவணங்களை பரிசீலனை செய்து எனக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி நிலுவைத் தொகையும், சட்டத்திற்கு புறம்பாக எனது ஈட்டிய விடுப்பு காசாக்கிய ஊதியத்தில் 10% பிடித்தம் செய்த தொகையும், அவற்றிற்கான அபராத வட்டி 6% ஐயும் உடன் வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரராகிய உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரின் 04.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 1990/2025/பி2–ல் உடுமலைபேட்டை நகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.08.2025 அன்று வருகை தர உள்ளார்கள். அதற்கான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், 05.08.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராக இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, 05.08.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) திரு. டி. ஷண்முகராஜா என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சியில் உதவி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு. டி.சண்முகராஜா என்பவர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் முதலாவது கோரிக்கையின்படி சேமநலநிதி வட்டித்தொகை மற்றும் ஊதியக்குழு நிலுவைத்தொகை தணிக்கை பிடித்தம் செய்த 10% தொகை போன்றவைகள் வழங்கப்படாமல் உள்ளது என்றும் மேற்படி நிலுவைத் தொகைகள் அனைத்தும் கிடைக்க உத்திரவிடுமாறு கோரப்பட்டுள்ளது. மனுதாரர் திரு.K. செந்தில்குமார் என்பவர் சுயவிருப்பு ஓய்வு பெற்ற 09.03.2022 அன்று சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி

கிடைக்கப்பெற்றதும் வட்டி தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கை 2–ற்கான பதில் – ஈட்டிய மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்புத் தொகையினை எதிர்காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் ஏற்படுத்தபடுமாயின் அதற்காக 10% தொகை பிடித்தம் செய்து நிர்வாக வரவாக்கப்பட்டு 2021–22–ம் ஆண்டு தணிக்கை முடிவுற்றதும் தனியர் மீது தணிக்கைத் தடைகள் ஏதும் ஏற்படுத்தப்படாமல் இருந்தால் 10% நிலுவைத்தொகை திரும்ப வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது, இதற்கான காசோலை ரூ.86,016/–க்கு நகராட்சியால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது நடைமுறையில் உள்ளதாகும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிலையில் 2021–22–ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் உரிய காப்புத்தொகை பதிவேடுகள் முறையாக கணக்கு முடிக்கப்படாமல் உள்ளதாக தணிக்கைத் தடை பத்தி எண்.04–ல் தெரிவித்து தணிக்கைத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பதிவேடுகள் கணக்கு முடிக்கப்பட்டு தொகை வரவாக்கப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் திரு. K. செந்தில்குமார் குடிநீர் விநியோக மேற்பார்வையாளர் தணிக்கைத்தடைக்கு பிடித்தம் செய்த தொகை ரூ.86,016/– இருப்பில் உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தாராபுரம் நகராட்சியிலிருந்து வரப்பெற்ற சேமநலநிதி தொகை ரூ.87,989/–ஐ இந்நகராட்சி சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.06 வரிசை எண்.16–ல் பதியப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 14.03.2011–ம் தேதியில் ரூ.4,129/– தொகையும், 19.06.2013–ம் தேதியில் ரூ.1,32,000/– தொகையும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால் மேற்கண்ட தொகை P.F. Loan ஆகும். இந்நகராட்சியில் 2010–11 ஆம் ஆண்டு சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.06 வரிசை எண்.03, 2013–14 பதிவேடு பக்கம் எண். 9 வரிசை எண். 3–ல் மேற்படி தொகைகள் வழங்கப்பட்டதற்கான பதிவுகள் ஆவணங்களில் உள்ளது. நகராட்சி கணக்குபடி வட்டித் தொகை தோராயமாக ரூ. 11,321/ மட்டுமே நிலுவையில் உள்ளது திரு. K. செந்தில்குமார் என்பவரின் வங்கி கணக்கு எண். போன்ற விவரங்களை வங்கியில் பெற்று மேற்கண்ட தொகை பெறப்படவில்லை என்பதற்கான ஆதாரங்கள் வங்கியில் பெற்று உண்மைத் தன்மை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுதாரரின் வாக்குமூலம், உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் சார்பாக விசாரணைக்கு ஆஜரான உதவி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) அவர்களின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரரின் புகார் மனுவில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார் (1) ஓய்வு பெற்று, 4 ஆண்டுகள் ஆகியும் இன்று வரை எனக்கு வழங்க வேண்டிய சேமநலநிதி ஊதியக்குழு நிலுவை, அதற்கான வட்டி தொகை ஆக மொத்தம் ரூ.20,91,838/– வழங்கிடவும், (2) தனக்கு வழங்க வேண்டிய, ஈட்டிய விடுப்பு, மற்றும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை காசாக்கி கொள்ள அனுமதிக்கப்பட்ட தொகையில் தணிக்கைத் தடை எழுப்பப்படும் என்பதற்காக 10% ரூ.86,017/– பிடித்தம் செய்து வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள தொகையினை அரசு வட்டியுடன் வழங்கிடவும் கேட்டுக்கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு வட்டி தொகை வழங்க சென்னை உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், உரிய அனுமதி கிடைக்கப்பெற்றதும் வட்டி தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், ஈட்டிய மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்புத் தொகையினை எதிர்காலத்தில் தணிக்கைத் தடைகள் ஏதும் ஏற்படுத்தபடுமாயின் அதற்காக 10% தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளத் தொகை ரூ.86,016/– உறுதி செய்யப்பட்டு அதற்கான காசோலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) அவர்களின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறியமுடிகிறது.

மேலும், தாராபுரம் நகராட்சியிலிருந்து வரப்பெற்ற சேமநலநிதி தொகை ரூ.87,989/–ஐ இந்நகராட்சி சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.06 வரிசை எண்.16–ல் பதியப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது நகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதும், கடந்த 14.03.2011–ம் தேதியில் ரூ.4,129/– தொகையும்,

**19.06.2013**–ம் தேதியில் ரூ.**1,32,000/–** தொகையும் வழங்கப்படவில்லை என மனுதாரர் தெரிவித்திருந்தது குறித்து மேற்கண்ட தொகை P.F. Loan ஆகும் என்பதும், இந்நகராட்சியில் **2010–11** ஆம் ஆண்டு சேமநலநிதி பதிவேடு பக்கம் எண்.**09** வரிசை எண்.**03** மேற்படி தொகைகள் வழங்கப்பட்டதற்கான பதிவுகள் ஆவணங்களில் உள்ளதாகவும், மனுதாரரின் வங்கி கணக்கு எண். போன்ற விவரங்களை வங்கியில் பெற்று உண்மைத் தன்மை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொறுப்பு) அவர்களின் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டிய மற்றும் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்புத் தொகைக்கு தணிக்கைதடை ஏதும் இல்லாததால், பிடித்தம் செய்யப்பட்டுள்ள **10%** தொகை ரூ.**86,016/–** உடனடியாக விடுவித்து, இதர நிலுவைத் தொகைகள் மற்றும் சேமநல நிதியில் கடனாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ஆகியவற்றை மனுதாரரின் வங்கி கணக்கை ஆய்வு செய்து உண்மைத் தன்மையை அறிந்து நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொண்டு, மனுதாரர்க்கு சேரவேண்டிய நிலுவைத் தொகைகளை வழங்கிட உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**2025**–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் **26**–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. செந்தில்குமார்,
த/பெ. கருப்புசாமி,
172 C, D.V. பட்டினம், தளிரோடு,
உடுமலைப்பேட்டை – **642 126**,
திருப்பூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032